**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.121/2024**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : காளியாத்தாள் | தொழில் | : அரசு பள்ளி ஆசிரியை |
| தகப்பனார் பெயர் | : நாச்சிமுத்துகவுண்டர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : ஐ.ஆலமரத்துப்பட்டி | வயது | : சுமார் 56 |
| தாலுக்கா | : கரூர் | நாள் | : 03.02.2026 |
| மாவட்டம் | : கரூர் | | |

**<u>பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>**

எனது தகப்பனார் பெயர் நாச்சிமுத்து கவுண்டர் என்றால் ? சரிதான். எனது தகப்பனாருக்கு இரண்டு மனைவி என்றால் ? சரிதான். முதல் மனைவி பெயர் என்ன என்றால் ? கருப்பாத்தாள். எனது தகப்பனாருக்கும் முதல் மனைவிக்கும் எத்தனை குழந்தைகள் என்றால் ? காளியாத்தாள் ஆகிய நான் மட்டும் குழந்தை. 2-வது மனைவி பெயர் லட்சுமி ஆகும். எனது தகப்பனாருக்கும் லட்சுமிக்கும் எத்தனை குழந்தைகள் என்றால் ? நாட்டுத்துரை என்ற மகனும் சௌந்திரம் என்ற மகளும் உள்ளார்கள். நாட்டுத்துரை என்பவர் மீது தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரிதான். வழக்கு போட்டுள்ள தாவா சொத்துக்கள் எனது தகப்பனார் நாச்சிமுத்துகவுண்டருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் ? சரியல்ல. பூர்விக சொத்துக்கள். எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கடந்த 25.06.2020ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் மூலம் எனது தகப்பனார் பிரதிவாதியான எனது சகோதரருக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் ? நான் பங்கிற்கு வரக்கூடாது என்று எழுதி வைத்துள்ளார். நானும், பிரதிவாதியும், தாயார், சகோதரி ஆகியோர்கள் சேர்ந்து

கதிரவன் என்பவருக்கு பூர்வீக சொத்துக்களை கிரையம் செய்தோம் என்றால் ?

சரிதான்.

(தொடர்ச்சியான குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.02.03 17:25:04 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்